**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**

இந்தியா வானிலை ஆய்வு துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 02-09-2022**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-09-02 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-09-03 | 2022-09-04 | 2022-09-05 | 2022-09-06 | 2022-09-07 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 6.0 | 6.0 | 14.0 | 16.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 29.0 | 29.0 | 29.0 | 28.0 | 28.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 25.0 | 25.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 10.0 | 8.0 | 10.0 | 10.0 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 200 | 200 | 230 | 250 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 6 | 8 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் இலேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 80% ஆகவும், பகல் நேரங்களில் 50% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 28.0-29.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24.0-25.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 8.0-10.0 கி.மீ ஆக தெற்கு திசையில் இருந்து தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

07.09.2022 முதல் 13.09.2022 வரை தமிழ்நாட்டில் மழை, குறைந்த பட்ச வெப்பநிலை மற்றும் அதிக பட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் வாரங்களில் இலேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி செய்யவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1. எதிர்பார்க்கபடும் மழையைப் பயன்படுத்தி சம்பா வயல்களை உழவு செய்து நேரடி விதைப்பு மற்றும் நடவுக்கு தயார் செய்யவும். 2. நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த தயாமீதாக்ஷம் 25% WG 100 கிராம்/எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கரும்பு | 1. கரும்பு பயிரில் மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்க் தாக்கம் காணப்படுகிறது. இதனால் பயிர்களின் வளர்ச்சி குன்றி மற்றும் குருத்து காய்ந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த இமிடாக்ளோப்ரிட் 17.8 SL 0.6 மிலி/லி அல்லது கார்பென்டாசிம் 1.0 கி/லி என்ற அளவில் தெளிக்கலாம். 2. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் கரும்பில் இளங்குருத்து புழுவின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC (0.5 மி.லி/ லிட்டர்) அல்லது பிப்ரோனில்5 % SC (2 மி.லி/ லிட்டர்) என்ற அளவில் தெளிக்கவும். |
| மக்காச்சோளம் | 1. மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் படைப்புழுவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது, அதை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடலாம். 2. சியன்ட்ரானிலிப்ரோல் 19.8% + தயாமீதாக்ஷம் 19.8 FS @ 4.0 மிலி/ கிலோ என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். 3. இஞ்சி அல்லது தட்டைப்பயிறு அல்லது உளுந்து பயிர்களை வரப்பு ஓரங்களில் நடவு செய்யலாம். 4. எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்கலாம். 5. குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC @ 0.4 மிலி/லி (அல்லது) ஃபுளூபெண்டிமைடு 20 WG (0.5 கிராம்/லி) என்ற அளவில் பயிர் செய்த 15-20 நாட்களில் தெளிக்க வேண்டும். 6. எமாமெட்டின் பென்சோயேட் 5 SG (0.4 g/l) அல்லது ஸ்பைனிடோராம் 11.7 SC (0.5 மிலி/லி) 35-40 நாள் மற்றும் 60 நாள் தெளிக்க வேண்டும். |
| பருத்தி | தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில்பருத்தி இளம் செடிகளில் பச்சை தத்துப்பூச்சியின் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த தயாமீதாக்ஷம் 25 WG 0.6 கிராம்/லிட்டர் அல்லது இமிடாகுளோபரிட் 17.8 SL 0.6 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மரவள்ளிக்கிழங்கு | தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் மரவள்ளிகிழங்கில் மாவுப்பூச்சியின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த புளோனிகாமைடு 50% WG 60 கிராம்/ஏக்கர் அல்லது ஸ்பைரோசடெட்ராமெட் 150 OD 250 மிலி/ஏக்கர்அல்லது தயாமீதாக்ஷம் 25 WDG 40 கிராம்/ஏக்கர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தென்னை | 1. பசைதடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றி கட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். 2. வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள் / பொறிவண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. 3. அதிகபாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0மிலி/ லிட்டர்தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும். |